RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22s219

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

கடையேழு வள்ளல்களின் கொடைத் திறமும் சிறுபாணாற்றுப்படையும்

வே. இராசாம்பாள் [அ, *]

[அ] தமிழ்(பகுதி நேரம்), கந்தசாமிக் கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா.

The Generosity of the Seven Donors and the Sirupanatruppadai

V. Rasambal [a, *]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, Velur, Namakkal, Tamil Nadu, India

* Corresponding Author:
sanjayrasu@gmail.com

Received: 24-03-2021
Revised: 10-01-2022
Accepted: 13-01-2022
Published: 28-02-2022

ABSTRACT

Literary histories refer to Sangam literatures as song and sum. They are Eighteen Greater Texts they relate human life to archeology, kings, civilians, and nature on the basis of the department into two categories, internal and external. Comfort is about finding the leader who gives the gift and comforting the person receiving the gift. One of the recipients of the Oymanattu Nalliyak Kodan Fame Award, a poet who came to Kurinjik Koman to see Nalliyak Kodan, had to cross the weaving land Ail Pattinam, Mullai land and the mangrove towns to recount these four land features. And the fact that they are no longer prosperous is called Parry more than Marie in giving. Twenty-eight lines also refer to the seven barracks of Bari, Bagan, Kaari, Ori, Aay, Adhiyaman, and Nalli. Nallur Nattathanar of the Intermediate Country also mentioned the specialty of the seven valleys and highlighted the gift of Nalliyak Kodan of Oyma. Seven Donors are Paari, Began, Kaari, Ori, Aay, Adhiyaman, Nalli their Activities Compare to Sirupanatruppadai. This Article Shows Seven Donors habits, generosity, Helping Condition of the poor people.

Keywords: Generosity, Seven Donors, Sirupanatruppadai.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் என்றால் பாட்டும் தொகையும் என்றே இலக்கிய வரலாறுகள் குறிப்பிடுகின்றன. அவை பதினெண் மேற்க்கணக்கு நூல்களாகும். அவை மனித வாழ்வை அகம், புறம் என்ற இரண்டு வகைப்பாட்டில் திணை அடிப்படையில் மக்களின் வாழ்வியலைத் தொல்லியல், அரசர்கள், குடி மக்கள், இயற்கை ஆகியவற்றோடு எடுத்துரைப்பதாகும். ஆற்றுப்படை என்றால் பரிசில் தரும் தலைவனைத் தேடிச் சென்று, பாணன் பரிசில் பெற ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருப்பதாகும். ஒய்மாநாட்டு நல்லியக் கோடன் புகழ் பாடிப் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் குறிஞ்சிக் கோமான் நல்லியக் கோடனைக் காண, நெய்தல் நில எயில் பட்டினத்தையும், முல்லை நிலத்தையும், மருதநில ஊர்களையும் கடந்து செல்ல வேண்டும் என்று கூற வந்த புலவர் இந்த நான்கு நிலச் சிறப்புக்களைக் கூறுவதுடன் மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களும் அவர்கள் தலைநகர்களான வஞ்சி, உறையூர், மதுரை ஆகியவற்றின் சிறப்புகளும் கூறப்பட்டுள்ளதோடு அவை இப்போது செழிப்பாக இல்லாமல் இருப்பதும் கொடை கொடுப்பதில் மாரிக்கும் மேலான பாரி என்பார்கள். பாரி, பேகன், காரி, ஓரி, ஆய், அதியமான், நள்ளி ஆகிய கடையேழு வள்ளல்களைப் பற்றியும் இருபத்தெட்டு வரிகளில் சிறுபாணாற்றுப்படை குறிப்பட்டுள்ளது. கடையேழு வள்ளல்களின் சிறப்பைக் கூறியதோடு ஒய்மா நாட்டு நல்லியக் கோடனின் கொடையையும் உயர்த்தி இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

கூறியுள்ளார். நினைத்த நேரத்தில் நினைத்த பொருளைச் சற்றும் யோசிக்காமல் கேட்பவர்களுக்குக் கொடையாக வழங்கிய செயலால் சான்றோர்கள் இவர்களை வள்ளல்கள் என வரையறுத்துக் கூறினர்.

வள்ளல்களின் வரலாறு

தமிழிலக்கிங்களில் பல வள்ளல்கள் பற்றிய குறிப்புகள் பரந்த அளவில் இடம் பெற்றுள்ளன. அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்கிற்கொண்டு வள்ளல்கள் முதலேழு, இடையேழு, கடையேழு என்று பகுத்துள்ளனர். ஆனால் முதலேழு மற்றும் இடையேழு வள்ளல்கள் பற்றிய முழு விவரங்கள் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவர்களைப் பற்றிய இலக்கியங்கள் காலப் போக்கில் அழிந்து போய் விட்டன. "யாவருமே வள்ளல்களாயினும் அவர்களுள் ஏழு பேரை மிகச் சிறந்த வள்ளல்கள் என்று பாராட்டியிருக்கிறார்கள்" வள்ளல் என்றால் வரையாது கொடுப்போன் என்பது பொருளாகும். தலை வள்ளல்கள் சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன் ஆகிய எழுவராவர். இடையேழு வள்ளல்கள் அக்குரன், அந்திமான், கன்னன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன் ஆகியோர்களாவர் (Jagannathan, 2017). மகாபாரதத்தில் இடம் பெறும் கர்ணன் கூட இதிகாச கால வள்ளல் தான். பழங்காலத்தில் ஈகையையும், கொடையையும் ஒன்றாகப் பார்த்தனர். "உண்டாட்டுக் கொடையென","" இல்லான் கொடையே கொடைப்பயன்" என்கிறது பாடல் (Dhamotharam Pillai, 1885; Rajagopalaiyangar, 1922). நுணுகிப் பார்க்கும்போது பொதுவாக ஈகையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது கொடையாகும். "தமிழ்நாட்டில் பல்வேறு குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் தமது வீரத்தாலும், கொடைப் பண்பாலும் சிறப்பாகப் போற்றப்பட்டனர். இவர்கள் ஒரே காலத்தில் அல்லாமல் பல்வேறு காலங்களில் வாழ்ந்தனர். சங்க காலத்தில் வாழ்ந்த ஏழு பேர் மட்டுமே வீரத்தை விடக் கொடைச் சிறப்பால் சிறப்பாகப் போற்றப்பட்டதால் வள்ளல்கள் என அழைக்கப்பட்டனர்". சங்க காலத்தில் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் பண்பும், மனப்பான்மையும் உற்றவர்களாக மக்கள் வாழ்ந்தனர். உதவி என்று வருபவர்களுக்கு வாரி வழங்கியவர்கள் வள்ளல்கள் (Perumalsamy, 2007).

சிறுபாணாற்றுப்படையும் வள்ளல்களும்

பாணர் என்பவர் யாழ்ப்பாணர், இசைப் பாணர், மண்டைப் பாணர் என்று பலபிரிவினர் உள்ளனர். இப்பாடலில் குறிப்பிடப்படுபவர் யாழ்ப்பாணன் ஆவான். யாழ்ப்பாணருள் சிறுபாணர், பெரும்பாணர் என்னும் இரு பிரிவுகள் உண்டு. "இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ" (என வரும் சிறுபாணாற்று அடியும், "இடனுடைப் பேரியாழ் முறையுறிக் கழிப்பி" என வரும் பெரும்பாணாற்றுப்படை அடியும் சுட்டுகின்றன (Manikkavasagan, 2012). பாணர்கள் வைத்திருந்த யாழின் வடிவமைப்பைக் கொண்டு சிறுபாணர், பெரும்பாணர் என்று பிரிக்கின்றனர். நல்லியக் கோடனின் கொடைச் சிறப்பு, உலகம் வியந்து கூறும் கடையேழு வள்ளல்களின் வள்ளல் தன்மைக்கு நிகராகக் கருதப்படுகிறது. அவனுடைய கொடைப் பண்பு, மற்றவர்களுக்கு உதவும் தன்மை, பாணர்களை உபசரிக்கும் முறை போன்ற அனைத்திலும் சிறந்து விளங்கினான் என்பதைச் சிறுபாணாற்றுப்படை மூலமாக அறிய முடிகிறது.

பாரி

பறம்பு மலையையும் அதைச் சூழ்ந்திருந்த முன்னூறு ஊர்களையும் ஆட்சி செய்த குறுநில மன்னன் பாரி ஆவார். வேளிர் குலத்தைச் சார்ந்தவன் என்பவதால் வேள் பாரி என்று அழைக்கப்பட்டார். பாரி வேள் வீரத்தில் சிறந்தவர் என்றாலும், கொடையிலே இணையற்றவன். புலவர்களுக்கு உணவு, உடை, பொருள், ஓர் ஊர் முழுவதையும் கொடையாக அளித்து அதில் வருகின்ற வருவாயை நுகரும்படி செய்தவன். ஆறறிவு உயிரினங்கள் மட்டுமல்லாது ஓரறிவுள்ள முல்லைக் கொடிக்குத் தன் தேரைப் பற்றுக் கோடாகக் கொடுத்து 'முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல்' என்று அழைக்கப்பட்டார். அவன் ஆட்சி செய்த பறம்பு மலை தற்போது பிரான்மலை என்று அழைக்கப்படுகிறது. அந்தக் காலத்தில் மரங்கள் அடர்ந்திருந்து வளமுடையதாக இருந்தது. மலைப்பாறைகளில் தேனீக்கள், வண்ண வண்ண மலர்கள், சுனைகள் இருந்தன. அந்த மலையில் சுனை நீர் இருந்ததை "பாரி பறம்பில்

பனிச்சனைத் தெண்ணீர்" குறிப்பிடுகிறது (Saminatha Iyer, 2007). பாரி வள்ளல் பாதையின் வழியே தேர் மீது ஏறிச் சென்றான். பாதையில் சிறிய பூக்களை உடைய முல்லைக் கொடி பற்றிப் படருவதற்கு இடம் இல்லாமல் தவித்தது. இதைக் கண்ட பாரி தான் ஏறி வந்த தேரை அவ்விடத்தில் நிறுத்தினான். அதில் முல்லைக் கொடியைப் படர விட்டான். இத்தகு இரக்க குணம் கொண்டவன் பாரி என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

"நறுவீ உறைக்கும் நாகநெடுவழிச்

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய

பிறங்கு வெள் அருவி விழும் சாரல்

மறம்பின் கோமான் பாரியும்" (Manikkavasagan, 2012)

"பாரி பாரி என்று பல ஏத்தி

ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனும் அல்லன்

மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

"பறம்பு பாடினர் அதுவே அறம் பூண்டு

பாரியும் பரிசிலர் இரப்பின்"

காரி

காரியின் முழுப்பெயர் மலையமான் காரி ஆகும். மலாடு என்னும் மலையமான் நாடு அவனது நாடு என்றும் கோவல் என்னும் திருக்கோவிலூர் அவனது ஊர் என்றும் புலவர்கள் பாடியுள்ளனர் (Saminatha Iyer, 2007). மலையமான்கள் என்னும் வீரக்குடியில் பிறந்தவர் என்பதாலும், மலைகள் அதிகம் கொண்டது என்பதாலும் மலையமா நாடு என்று வழங்கப்பட்டது. அந்த மலைகளுள் மிகப் பெரியது முள்ளூர் மலைக் கானகத்தில் விளையும் சந்தனம் மணத்திலே சிறந்தது என்பதை,

"எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து

ஆரம் நாறு"

"முரண்கொள் துப்பின் செவ்வேள் மலையன்" எனும் பாடல்களின் மூலம் அறியலாம் (Saminatha Iyer, 2007). புலவர்களிடம் பேரன்பு கொண்ட திருமுடிக்காரி வருவோர்க்கெல்லாம் தரம் அறியாது வழங்கினான் (Saminatha Iyer, 2007). மூவேந்தர்கள் வழங்கிய பொருள்களையெல்லாம் காரி தனக்கென எதையும் வைத்துக் கொள்ளவில்லை. அனைவருக்கும் வாரி வாரி வழங்கினார்.

"கறங்குமணி

வால் உளைப் புரவியொடு வையகம் மருள

ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த

அழல்திகழ்த்து இமைக்கும் அஞ்சுவருநெடுவேல்

கழல்தொடித் தடக்கை காரியும்"

காரி மன்னன் தனக்குக் கிடைத்த யானை, குதிரை, தேர், பொன், பொருள் அனைத்தையும் மற்றவர்களுக்கு வழங்கினார் (Manikkavasagan, 2012). 'தேர்வண் மலையன்' என்று புலவர்கள் பாடிப் புகழ்ந்தனர்.

"நெடுந்தேர்க் காரி காடுங்கால் முன் துறை" வலிமை பொருந்திய தேரினை உடையவன் (Saminatha Iyer, 2007).

ஓரி

ஓரியை 'ஆதன் ஓரி', 'வல்வில் ஓரி' என்றும் சொல்வார்கள். இவன் மழை போல யாவருக்கும் எப்பொருளையும் வரையாது வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவன் என்பதை,

"ஓர் விசும்பில் கருவி வானம் போல" என்று புறநானூறு குறிப்பிடுகிறது. தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலைக்கு உரியவன் ஓரி (Saminatha Iyer, 2007). அம்மலையின் மேற்புறம் அழகிய கொல்லிப்பாவை இருந்தது என்பதை,

"வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்

பாவை" என்னும் அடிகளாலும், வலிய தேரையுடைய ஓரியின் மலைப் பகுதியிலுள்ள பூக்களை அளைந்து வரும் காற்று நறுமணம் மிக்கது என்பதை,

"திண் தேர்க்

கைவள் ஓரி கானம் தீண்டி

ஏறிவள் கமழும". என்னும் அடிகளால் அறிய முடிகிறது

"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி

செல்லாநல்லிசை நிறுத்த வல் வில்

ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த

செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி,"

என்ற பாடலடிகள் வல்வில் ஓரி காரியோடு போரிட்டு மாண்டார் (Saminatha Iyer, 2007). நாட்டை வென்ற காரி அச் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறைக்குக் கொடுத்தான் என்று குறிப்பிடுகிறது.

" நவிசினை

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்து

குறும்பொறை நல்நாடு கோடியர்க்கு ஈந்த

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

ஓரிக்குதிரை ஓரியும்" (Manikkavasagan, 2012)

நள்ளி

குறிஞ்சி (மலை) வளம் செறிந்த கண்டீர நாட்டினர். இவரை நளிமலை நாடன் என்றும் கண்டீரக் கோப்பெரு நள்ளி என்றும் பெருநள்ளி என்றும் வழங்கினர்.

"கரவாது,

நட்டோர் உவப்ப, நடைப் பரிகாரம்

முட்டாது கொடுத்த, முனை விளங்கு தடக்கை

துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு

நளிமலை நாடன், நள்ளியும்" நள்ளி தன்னை நாடி வந்தவர்க்கு நல்குரவால் பின்னர் நலியாதவாறும் வேறொருவர் பால் சென்று இரவாதவாறும் நிரம்ப நல்கும் இயல்பினை உடையவர் (Manikkavasagan, 2012).

"நள்ளி! வாழியேர் நள்ளி! நள்ளென்

மாலை மருதம் பண்ணிக் காலைக்

கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி,

வரவுஎமர் மறந்தனர் அது நீ

புரவுக்கடன் பூண்ட வண்மையானே" (Saminatha Iyer, 2007)

அதியமான்

இம்மன்னர் அதியர் என்னும் குடியில் பிறந்தவர். தகடூரை ஆண்டவன். அதியன், அதிகமான், அதியமான் என்னும் பெயர்கள் இவனுக்கு உண்டு. இம்மன்னன் ஔவையாரிடம் நட்பு கொண்டிருந்தான். அதியமான் குதிரைமலை அரசன் ஆவான். அதியமான் வேட்டைக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மலைச் சாரலில் மருத்துவத் தன்மை உடைய நெல்லிக்கனியை அம்மரத்தில் கண்டான். அக்கனியை உண்போர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்பதை அறிந்து கொண்டு தான் உண்ணாமல் ஔவையாருக்கு நெல்லிக்கனியைக் கொடுத்தான்.

"மால் வரைக்

கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி

அமிழ்து விளைதீம் கனி ஔவைக்கு ஈந்த

உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்

அரசக் கடல் தானை அதிகனும் "அழகிய மலையையும், கூர்மையான வேலினையும், வில்வமாலையையும், வளைந்த பூணினையும் உடைய அழகு மிகுந்த அதியமான் என்பதனை,

"ஊராது ஏந்திய குதிரை கூர்வேல்

கூவிளங் கண்ணி, கொடும் பூண் எழினியும்" என்ற புறநானூறு பாடல் நூலின் வாயிலாகச் சுட்டுகிறது (Saminatha Iyer, 2007).

ஆய்

ஆய் என்ற வள்ளல் பொதிய மலையில் ஆட்சி புரிந்தவன். அதனைச் சார்ந்து திருக்குற்றாலம், பாபநாசம் என்னும் இடங்கள் இருக்கின்றன. இவன் ஆட்சிக்குட்பட்ட பொதியமலைப் பகுதியில் சந்தனம் விளைந்து தமிழ்நாட்டுக்குச் சிறப்பைச் சேர்த்தது. அம்மலையில் வேங்கையும் காந்தளும் மலர்ந்து மணம் வீசும் என்பதை,

"குழல்தொடி ஆய் மழை தவழ் பொதியில்

வேங்கையும் காந்தளும் நாறி" என்ற பாடலின் மூலம் அறியலாம். பொதிய மலையில் யானைகள் மிகுதியாக இருந்தன. ஆய் அண்டிரன் தன்னிடம் வரும் பாணர்கள் மற்றும் புலவர்களுக்குப் பொன் மணிகள் இவற்றோடு யானையும் பரிசாக வழங்குவான் (Saminatha Iyer, 2007). இதனால் 'யானைப் பரிசில் தருபவன்' என்று மக்களால் அழைக்கப்பட்டான். தவம் செய்து கிடைப்பதாகிய நீல ஆடையை இறைவனுக்கு வழங்கி இறைவனையும் தன்னிடம் கொடை பெற்றவனாக ஆக்கி விட்டான் ஆய் அண்டிரன்.

"நிழல்திகிழ்

நீலநாகம் நல்கிய கலிங்கம்

ஆல அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த

சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்

ஆர்வ நன்மொழி ஆயும் " (Manikkavasagan, 2012)

"ஈகை அரிய இழையணி மகளிரொடு

சாயின்று என்ப ஆஅய் கோயில்"

இப் பாடலால் கொடைக்குக் கொடுத்தற்கரிய என "இழையணி" என்று குறிக்கப்படுவது அணி, தாலி, மங்கல நாண் எனப் பல்வேறு பொருள்களைத் தருவதால் குழப்பமாக இருக்கிறது (Saminatha Iyer, 2007).

பேகன்

குறுநில மன்னனான இவன் ஆவியன் குடியில் தோன்றியவன். அவன் மழைப் பருவத்தில் மயில் காட்டில் அகவியதைக் கேட்டான். குளிரால் நடுங்கி மயில் அகவியது என்று எண்ணினான். அதன் மீது இரக்கம் கொண்டு போர்வையைப் போத்தினான். இதனை,

"அதா அன்று

வானம் வாய்ந்த வளமலைக் கலாஅன்

கானமஞ்சைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்

பெருங்கல் நாடான் பேகனும்" என்னும் பாடலடியின் மூலம் அறியலாம். இத்தகு கொடையால் இவன் அழியாப் புகழ் பெற்றான் (Manikkavasagan, 2012).

மழை எப்படி அனைத்து இடங்களிலும் வேறுபாடின்றி பொழியுமோ அதனைப் போன்று பேகன் கொடை கொடுப்பான் என்று புறநானூறு கூறுகிறது.

"கடாஅ யானைக் கழற்காற் பேகன்

கொடைமடம் படுதல் அல்லது"

"அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை

பெருங்கல் நாடன் பேகனும்" என்ற பாடல்களின் மூலம் அறியலாம் (Saminatha Iyer, 2007).

முடிவுரை

கடையேழு வள்ளல்களின் சிறப்புகள் வானளாவி உயர்ந்து நிற்கின்றன. தமிழ்நாடு வள்ளன்மை பொருந்திய நாடாகத் திகழ்ந்துள்ளது. கடையேழு வள்ளல்கள் ஈகை, கொடைத் திறத்தால் அனைவரின் வறுமையைப் போக்கியுள்ளனர். அவர்களின் பெருந்தன்மை தம்மைத் தேடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வழங்கியுள்ளனர் என்பதைக் கேட்கும்போது உள்ளம் மகிழ்ச்சியாக இருக்கிறது. சங்க இலக்கியங்களில் பல இடங்களில் அவர்களின் புகழ், கொடை, ஆட்சி சிறப்பு ஆகியவை பற்றி எடுத்துரைக்கின்றன. சிறுபாணாற்றுப்படை ஆற்றுப்படை நூல்கள் அளவில் சிறியதாக இருந்தாலும் கடையேழு வள்ளல்களின் புகழை உலகிற்குக் காட்டியதால் பெரிய அளவில் புகழை எட்டியுள்ளது.

References

Dhamotharam Pillai, S, V., (1885) Tholkappiyam Porulathikaram, Pathippu, Ezhumbur, Chennai, India.

Jagannathan, K, V., (2017) Ezhu peru vallalkal, amutha nilaiyam private Ltd, Thenampettai, Chennai, India.

Manikkavasagan, G., (2012) Paththuppaattu moolamum vilakkamum, Uma pathippagam, Mannadi, Chennai.

Perumalsamy, V., (2007) Thamizhagaththil Arasukalin Thotram, Paavai publications, Rayapettai, Chennai.

Rajagopalaiyangar, V., (1922) Naladiyar, Kambar vilasam, Mylapore, Chennai, India.

Saminatha Iyer, U.V., (2007) Kurunthokai, Purananooru, Akananooru, Thirunelveli South Indian Saiva Siththantha Book Publishing House Ltd, Azhvarpettai, Chennai, India.

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License